31.03.2021
Case No. OS.121/2013
DW.1 - ராமலிங்கம் – வாதி தரப்பு குறுக்கு விசாரணை

தாவா வழக்கினை என் பெரியப்பா நிலத்தின் மீது பாகம் வேண்டுமென வழக்கு போட்டுள்ளார். 1 ½ ஏக்கர் சொத்திற்காக வழக்கு போட்டுள்ளார். சர்வே எண். 1/8 . மொத்த சொத்து 3 ஏக்கர். அதில் பாதி சொத்து தனக்கு வேண்டுமென வழக்கு போட்டுள்ளார். 3 ஏக்கருக்குரிய சர்வே எண். 1/8. அது குறித்து நான் எதிர்வழக்காடுகிறேன் என்று சொன்னால் சரிதான். சொத்து பாட்டனார் வீராசாமிக்கு எப்படி வந்தது என்றால் அவர் சம்பாதித்த சொத்து . கிரைய பத்திரத்தை நான் பார்த்தேனா என்றால் கிரைய பத்திரம் இல்லை. வீராசாமிக்கு பூர்வீக வகையில் பங்கு வந்த சொத்து. வேறு சொத்துக்களில் பாகம் வந்ததா என்றால் வந்தது. இதே சர்வே எண்ணில்தான் பங்கு வந்தது. சாட்சி பின்னிட்டு வேறு சொத்துக்களில் பங்கு வரவில்லை என கூறினார். வீராசாமிக்கு 3 மகன்கள் குப்பன், எனது தந்தை சுப்பிரமணி, சீனிவாசன் என்றால் சரிதான்.சீனிவாசனுக்கு திருமணமாகலேயே அவர் இறந்துவிட்டார் என்று சொன்னால் சரிதான். மொத்த சொத்து 4 ½ ஏக்கர். அதில் மூவருக்கும் தலா 1 ½ ஏக்கர் பங்கு வந்தது. 1/8 சர்வே எண்ணில் சீனிவாசனுக்கும், சுப்பிரமணிக்கும் வந்தது. குப்பனுக்கு வேறு சர்வே எண்ணில் பங்கு ஒதுக்கப்பட்டது. சர்வே எண். 1/8ல் சீனிவாசனுக்கு 1 ½ ஏக்கரும் சுப்பிரமணிக்கு 1 ½ ஏக்கரும் ஒதுக்கப்பட்டது என்ற விவரம் இவ்வழக்கில் பதில் போடும்போதே எனக்கு தெரியும் என்று சொன்னால் சரிதான். குப்பனுக்கு ஒதுக்கப்பட்ட சொத்தின் சர்வே எண் எனக்கு தெரியாது. அது நஞ்சையா, புஞ்சையா என்றால் புஞ்சை நிலம். எனது அப்பா குப்பனிடமிருந்து நிலம் வாங்கவில்லை. சீனிவாசனிடமிருந்து நிலம் வாங்கினார். சாட்சி பின்னிட்டு குப்பனிடம் நிலம் வாங்கியதாக கூறினார். சர்வே எண் தெரியாது. குப்பனுக்கு ஒதுக்கப்பட்ட சொத்து என் தாத்தா , பாட்டி ஜீவனத்துக்காக கொடுக்கப்பட்ட சொத்து. குப்பன் கூட்டுறவு சுசைட்டியில் கடன் வாங்கி கட்டாததால் சுசைட்டியிலிருந்து ஜப்திக்கு வந்துவிட்டார்கள். என் தாத்தா, பாட்டி ஜீவனுத்துக்காக இருந்த சொத்தைதான் குப்பன் வாங்கினார். என் தாத்தா பெயர் வீராசாமி. பாட்டி பெயர் தெரியாது. தாத்தா பாட்டிக்கு விட்ட சொத்தை குப்பன் விற்றுவிட்டார். தாத்தா, பாட்டிக்கு எவ்வளவு சொத்து ஒதுக்கப்பட்டது என்றால் 50 சென்ட். அந்த 50 சென்டில் மூவருக்கும் பங்கு உண்டு. குப்பன் கடனாகிவிட்டது என்று கூறி 50 சென்டையும் வாங்கிக் கொண்டார். அந்த 50 சென்டை எங்களுக்கு விற்றுவிட்டார்.

எல்லோருக்கும் பாகம் கொடுத்துவிட்டு எனது தாத்தா, பாட்டி 50 சென்டை வைத்துக்கொண்டார்கள். பாகம் பிரிக்கும்போது தாத்தா, பாட்டி இருந்தார்களா என்று எனக்கு தெரியாது. 50 சென்ட் நிலம் 4 ½ ஏக்கரில் சேர்ந்ததா என்றால் இல்லை. 50 சென்ட் நிலம் எப்போது கிரையம் வாங்கப்பட்டது என்று சொன்னால் தெரியாது. சீனிவாசனிடமிருந்து 1982ல் கிரையம் வாங்கினோம். எந்த சர்வே எண்ணில் சீனிவாசனிடமிருந்து நிலம் வாங்கப்பட்டது என்று சொன்னால் சர்வே எண் ஞாபகமில்லை. எவ்வளவு விஸ்தீரனம் வாங்கப்பட்டது என்று சொன்னால் தெரியாது. அந்த அசல் பத்திரங்கள் எங்களிடம்தான் உள்ளது என்றால் சரிதான். அந்த பத்திரத்தை பார்த்தால் தெரியவரும் என்று சொன்னால் சரிதான். அந்த அசல் பத்திரத்தை தாக்கல் செய்கிறேனா என்றால் தயாராக உள்ளேன். குப்பனிடமிருந்து வாங்கியதாக சொல்லும் 50 சென்ட் நிலத்தின் அசல் பத்திரம் என்னிடம் உள்ளது. அந்த பத்திரத்தை பார்த்தால் சர்வே எண், விஸ்தீரனம் ஆகியவை தெரியவரும் என்று சொன்னால் சரிதான். குப்பனிடமிருந்து எவ்வளவு விஸ்தீரனம் கிரையம் வாங்கப்பட்டது என்று எனக்கு தெரியாது. அந்த விவரங்கள் தெரியாமல்தான் குப்பனிடமிருந்து கிரையம் வாங்கியதாக சர்வே எண் மற்றும் விஸ்தீரனம் குறிப்பிட்டுள்ளேன் என்று சொன்னால் சரிதான். அசல் பத்திரத்தை பார்த்தால் குப்பன் மற்றும் சீனிவாசன் கையெழுத்துள்ளார்களா என்ற விவரம் தெரியவரும் என்று சொன்னால் சரிதான். எங்களுக்கு நடைபெற்றதாக சொல்லப்படும் பாகப்பிரிவினை பத்திரத்தில் குப்பன் மற்றும் சீனிவாசனிடமிருந்து எனது தந்தையார் கிரையம் பெற்றதாக எழுதப்பட்டுள்ளதா என்றால் எழுதப்பட்டுள்ளது. என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் அவ்வாறு இல்லை. உண்மையில் என் தந்தையார் கிரையம் வாங்கியிருந்தால் மேற்படி விவரங்கள் சொல்லப்பட்டிருக்கும் என்றும் அவ்வாறு கிரையம் வாங்காத காரணத்தினால்தான் அந்த விவரங்கள் சொல்லப்படவில்லை என்பதுடன் அசல் பத்திரங்கள் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல.

(குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்பட்டது)